**<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், தஞ்சாவூர்</u>**

**முன்னிலை : திருமதி.அ.மலர்விழி, M.L.,**

**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி.**

**தஞ்சாவூர்.**

2023 ஆம் ஆண்டு திங்கள் 30 ஆம் நாள் திங்கட்கிழமை

(திருவள்ளுவராண்டு 2054 – தைத் திங்கள் 16 ஆம் நாள்)

**<u>அசல் வழக்கு எண்.178/2022</u>**

**<u>CNRNo:TNTJ010068142022 OS/1938/2022</u>**

B.R.சங்கர் ...... **வாதி**

**/எதிர்/**

(1) V. கல்யாணி

(2) V. ஹர்ஷவர்தன்

(3) V. கமலேஷ்

......**பிரதிவாதிகள்**

இவ்வழக்கு, தஞ்சாவூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் **10.8.2022** அன்று கோப்பில் எடுக்கப்பட்டு மேற்படி தேதியிலேயே இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இவ்வழக்கு 4.1.2023 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்ததில் வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. **K. ராமநாதன்** அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.**V. பாலசுப்பிரமணியன்** அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படாத நிலையில், பிரதிவாதிகள் அழைத்து ஆஜராகாததால் வருகையில்லா தரப்பினர்களாக்கப்பட்டும், வாதி தரப்பு வாதத்தைக் கேட்டும், வழக்கில் சம்பந்தப்பட்ட முக்கிய ஆவணங்களைப் பரிசீலித்தும், இவ்வழக்கினை இதுநாள் வரை எனது கவனமான பரிசீலனையில் வைத்திருந்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>தீர்ப்புரை</u>**

(1) வாதிக்கு, பிரதிவாதிகள் ரூ.**1,33,30,507**/-ஐ 12% பின் வட்டியுடனும்,

வழக்கின் செலவுத் தொகையுடனும் கொடுக்கவேண்டுமென தீர்ப்பாணை வழங்கக்கோரி இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்** :</u>

(2) வாதியிடமிருந்து, 1ஆம் பிரதிவாதியின் கணவரும், 2, 3 பிரதிவாதிகளின் தகப்பனாருமான இறந்த விஸ்வநாதன் என்பவர் அவர் உயிருடன் இருக்கும்போது வாதியின் நண்பர் என்ற முறையில் 11.12.2015 தேதியில் தனக்கு சொந்தமான சொத்தை அடமானம் எழுதிக் கொடுத்துவிட்டு ரூ.15,00,000/- கடனாகப் பெற்றுக்கொண்டுள்ளார். மேற்படி அடமானப்பத்திரம் தஞ்சாவூர் இணை I சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 6650/2015ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படிகடன் பத்திரத்தில் கடன் தொகையான ரூ.15,00,000/-த்திற்கு 24% வட்டி தருவதாக பிரதிவாதி ஒப்புக்கொண்டுள்ளார். மேற்படி அடமானச் சொத்தின் மூலப்பத்திரமாக 1,7,2002 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட அவரது தாயார் கமலாம்பாள் எழுதிவைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தை வாதியிடம் கொடுத்துள்ளார். மேற்படி அடமானக் கடன் சம்பந்தமாக வாதி தனியே வழக்கு தாக்கல் செய்யவிருக்கிறார். மேலும், மேற்படி விஸ்வநாதன் 12.12.2015 அன்று ரூ.50,00,000/- கடன் பெற்றுக்கொண்டு மேற்படி தொகையை 24% வட்டி தருவதாக ஒப்புக்கொண்டு ஒரு கடன் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார். மேலும், 5.6.2020ல் விஸ்வநாதன் முதல் பிரதிவாதியான அவரது மனைவியுடன் 5.6.2020 அன்று அவசர தேவைக்காக ரூ.20,00,000/-மும் 19.11.2020 தேதியில் ரூ.15,00,000/-மும் கடன் பெற்றுக்கொண்டு அதனை 12% வட்டியுடன் திருப்பித்தருவதாக

ஒப்புக்கொண்டுள்ளார். வாதி பலமுறை விஸ்வநாதனை சந்தித்து கடன் தொகைகளுக்கு வட்டிதரும்படி கேட்டபோதும் வட்டி தராமல் இருந்துவந்துள்ளார். இறுதியாக 10.10.2021 அன்று விஸ்வநாதன் தன் மனைவியுடன் வந்து 11.12.2015 அன்று வாதியிடம் வாங்கிய ரூ.15,00,000/-, 12.12.2015ல் வாங்கிய ரூ.50,00,000/- , 5.6.2020ல் வாங்கிய ரூ.20,00,000/- 19.11.2020ல் வாங்கிய ரூ.15,00,000/- ஆகியவற்றை ஒப்புக்கொண்டு மேற்படி கடன் தொகைகளை வட்டியுடன் சேர்த்து தனக்கு சொந்தமான சொத்தை விற்பனை செய்தவுடன் தருவதாக எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி விஸ்வநாதன் 15.9.2021 அன்று இறந்துவிட்டார். பிரதிவாதிகள் விஸ்வநாதனின் வாரிசுகள் என்ற முறையில் விஸ்வநாதன் 12.12.2015ல் வாங்கிய ரூ.50,00,000/- ஐ 24% வட்டியுடனும் 5.6.2020ல் வாங்கிய ரூ.20,00,000/- 19.11.2020ல் வாங்கிய ரூ.15,00,000/- ஆகியவற்றை 12% வட்டியுடனும் வாதிக்கு திருப்பிக்கொடுக்கக் கடமைப்பட்டவர்கள். மேற்படி விஸ்வநாதன் இறந்தபிறகு அவரது வாரிசுகளான பிரதிவாதிகளிடம் கடன் தொகையை வாதி பலமுறை கேட்டும் எவ்வித பதிலும் வராததால் 4.7.2022 தேதியில் வழக்கறிஞர் மூலமாக வாதி பிரதிவாதிகளுக்கு அறிவிப்பை அனுப்பியுள்ளார். அதனை பிரதிவாதிகள் பெற்றுக்கொள்ளாமல் திருப்பியனுப்பிவிட்டனர். வாதிகள் வசம் அதிக மதிப்புள்ள சொத்துக்கள் இருப்பதால் அவர்களுக்கு கடன் நிவாரண சட்டத்தின் பலன்கள் எதுவும் கிடைக்கக்கூடியதல்ல . எனவே, வாதிக்கு, பிரதிவாதிகள் ரூ.**1,33,30,507/-**ஐ 12% பின் வட்டியுடனும், வழக்கின் செலவுத் தொகையுடனும் கொடுக்கவேண்டுமென

தீர்ப்பாணை வழங்கக்கோரி இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(3) பிரதிவாதிகள் வழக்கறிஞர் மூலமாக வக்காலத்து தாக்கல் செய்துள்ளபோதிலும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாதநிலையில் பிரதிவாதிகள் அழைத்து ஆஜராகாததால் எதிரவரில்லா நிலையாக்கப்பட்டுள்ளனர். இவ்வழக்கில் வாதி தரப்பில் வா.சா.1 விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ. 1 முதல் வா.சா.ஆ. 16 வரையான ஆவணங்கள் குறியிடப்பட்டுள்ளன.

(4) **தீர்விற்குரிய பிரச்சினை யாதெனில்,**

வாதி கோரிய படி வழக்கு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

<u>**தீர்வு**</u>

**(5)** வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. வாதி தனது வழக்குரையில் வாதியிடமிருந்து, 1ஆம் பிரதிவாதியின் கணவரும், 2, 3 பிரதிவாதிகளின் தகப்பனாருமான இறந்த விஸ்வநாதன் என்பவர் அவர் உயிருடன் இருக்கும்போது வாதியின் நண்பர் என்ற முறையில் 11.12.2015 தேதியில் தனக்கு சொந்தமான ஒரு சொத்தை அடமானம் எழுதிக் கொடுத்துவிட்ட ரூ.15,00,000/- கடனாகப் பெற்றுக்கொண்டுள்ளார் என்றும், மேற்படி அடமானப்பத்திரம் தஞ்சாவூர் இணை I சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 6650/2015ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படிகடன் பத்திரத்தில் கடன் தொகையான ரூ.15,00,000/-த்திற்கு 24% வட்டி தருவதாக பிரதிவாதி ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், மேற்படி அடமானச் சொத்தின்

மூலப்பத்திரமாக 1.7.2002 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட அவரது தாயார் கமலாம்பாள் எழுதிவைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தை வாதியிடம் கொடுத்துள்ளார் என்றும், மேற்படி அடமானக் கடன் சம்பந்தமாக வாதி தனியே வழக்கு தாக்கல் செய்யவிருக்கிறார் என்றும், மேலும், மேற்படி விஸ்வநாதன் 12.12.2015 அன்று ரூ.50,00,000/- கடன் பெற்றுக்கொண்டு மேற்படி தொகையை 24% வட்டி தருவதாக ஒப்புக்கொண்டு ஒரு கடன் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், மேலும், 5.6.2020ல் விஸ்வநாதன் முதல் பிரதிவாதியான அவரது மனைவியுடன் 5.6.2020 அன்று அவசர தேவைக்காக ரூ.20,00,000/-மும் 19.11.2020 தேதியில் ரூ.15,00,000/-மும் கடன் பெற்றுக்கொண்டு அதனை 12% வட்டியுடன் திருப்பித்தருவதாக ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், வாதி பலமுறை விஸ்வநாதனை சந்தித்து கடன் தொகைகளுக்கு வட்டிதரும்படி கேட்டபோதும் வட்டி தராமல் இருந்துவந்துள்ளார் என்றும், இறுதியாக 10.10.2021 அன்று விஸ்வநாதன் தன் மனைவியுடன் வந்து 11.12.2015 அன்று வாதியிடம் வாங்கிய ரூ.15,00,000/-, 12.12.2015ல் வாங்கிய ரூ.50,00,000/-, 5.6.2020ல் வாங்கிய ரூ.20,00,000/- 19.11.2020ல் வாங்கிய ரூ.15,00,000/- ஆகியவற்றை ஒப்புக்கொண்டு மேற்படி கடன் தொகைகளை வட்டியுடன் சேர்த்து தனக்கு சொந்தமான சொத்தை விற்பனை செய்தவுடன் தருவதாக எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், மேற்படி விஸ்வநாதன் 15.9.2021 அன்று இறந்துவிட்டார் என்றும், பிரதிவாதிகள் விஸ்வநாதனின் வாரிசுகள் என்ற முறையில் விஸ்வநாதன் 12.12.2015ல் வாங்கிய ரூ.50,00,000/- ஐ 24% வட்டியுடனும் 5.6.2020ல் வாங்கிய ரூ.20,00,000/- 19.11.2020ல் வாங்கிய

ரூ.15,00,000/- ஆகியவற்றை 12 % வட்டியுடனும் வாதிக்கு திருப்பிக்கொடுக்கக் கடமைப்பட்டவர்கள் என்றும், மேற்படி விஸ்வநாதன் இறந்தபிறகு அவரது வாரிசுகளான பிரதிவாதிகளிடம் கடன் தொகையை வாதி பலமுறை கேட்டும் எவ்வித பதிலும் வராததால் 4.7.2022 தேதியில் வழக்கறிஞர் மூலமாக வாதி பிரதிவாதிகளுக்கு அறிவிப்பை அனுப்பியுள்ளார் என்றும், அதனை பிரதிவாதிகள் பெற்றுக்கொள்ளாமல் திருப்பியனுப்பிவிட்டனர். வாதிகள் வசம் அதிக மதிப்புள்ள சொத்துக்கள் இருப்பதால் அவர்களுக்கு கடன் நிவாரண சட்டத்தின் பலன்கள் எதுவும் கிடைக்கக்கூடியதல்ல என்றும், எனவே, வாதிக்கு, பிரதிவாதிகள் **ரூ.1,33,30,507/-**ஐ 12% பின் வட்டியுடனும், வழக்கின் செலவுத் தொகையுடனும் கொடுக்கவேண்டுமென தீர்ப்பாணை வழங்கக்கோரி இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளாக குறிப்பிட்டுள்ளார். வாதி தன் வழக்குரை சங்கதிகளை அனுசரித்து வா.சா.1 ஆக சாட்சியமளித்துள்ளார்.

(6) வாதி தரப்பு வழக்கை நிரூபிக்கும்பொருட்டு வாதி தரப்பில் வா.சா.ஆ 1 ஆக 12.12.2015 தேதியிட்ட அடமானக் கடன் பத்திரத்தின் அசல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி கடன் பத்திரத்தைப் பரிசீலிக்கையில், விஸ்வநாதன் என்பவர் தனக்கு சொந்தமான சொத்தை 1 வருட காலக்கெடுவிற்கு அடமானமாக வைத்து ரூ.50,00,000/- கடன் பெற்றுக்கொண்டு மேற்படி தொகைக்கு மாதம்ஒன்றுக்கு ரூ.100/-க்கு ரூ.2/- வீதம் வட்டி சேர்த்து மேற்படி காலக்கெடுவிற்குள் கொடுத்து கடன் பத்திரத்தில் வரவு வைத்து வாபஸ்

பெற்றுக்கொள்வதாக எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 ஆவணமானது 5.6.2020 தேதியிட்ட கடனுறுதிச்சீட்டின் அசலாகும். மேற்படி கடனுறுதிச்சீட்டைப் பரிசீலிக்கையில் வாதியிடமிருந்து விஸ்வநாதன் ரூ.20,00,000/- தொகையை கடனாகப் பெற்றுக்கொண்டு அதனை மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு ரூ.1 வீதம் வட்டி சேர்த்து கொடுப்பதாக ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுத்துள்ளார் என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.3 ஆவணமானது 19.11.2020 தேதியிட்ட கடனுறுதிச்சீட்டின் அசலாகும். மேற்படி கடனுறுதிச்சீட்டைப் பரிசீலிக்கையில் வாதியிடமிருந்து விஸ்வநாதன் ரூ.15,00,000/- தொகையை கடனாகப் பெற்றுக்கொண்டு அதனை மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு ரூ.1 வீதம் வட்டி சேர்த்து கொடுப்பதாக ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுத்துள்ளார் என்பது தெரிய வருகிறது, வா.சா.ஆ.4 ஆவணமானது 10.3.2021 தேதியிட்ட கடன் கைலெட்டரின் அசலாகும். மேற்படி ஆவணத்தைப் பரிசீலிக்கையில், விஸ்வநாதன் வாதியிடம் கடனாகப்பெற்ற தொகைகளை ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுத்துள்ளார் என்பது தெளிவாகிறது. வா.சா..ஆ.5 ஆவணமானது 11.12.2015 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட அடமானக் கடன் பத்திரத்தின் ஜெராக்ஸ் நகலாகும். அந்த ஆவனம் இவ்வழக்கு கடனுக்கு சம்மந்தமில்லாததாகும். வா.சா.ஆ.6 ஆவணமானது 4.7.2022 தேதியில் வாதி, விஸ்வநாதன் என்பவரின் வாரிசுகளான பிரதிவாதிகளிடம் கடன் தொகையை திருப்பித்தருமாறு வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பின் நகலாகும். மேற்படி அறிவிப்பைப் பரிசீலிக்கையில், வாதியிடமிருந்து கடன் பெற்ற விஸ்வநாதன் இறந்துவிட்டபடியால் அவரது

வாரிசுதாரர்களான பிரதிவாதிகள் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளதாகவும், கடன் தொகையை திருப்பிக்கொடுக்கக்கோரியும் அனுப்பப்பட்டுள்ளது. வா.சா.ஆ.7 முதல் 9 ஆவணங்களானது 1, 2 பிரதிவாதிகளிடமிருந்து திருப்பியனுப்பப்பட்ட வாதியின் அறிவிப்பாகும், வா.சா.ஆ.10 ஆவணமானது 1.7.2002 தேதியில் விஸ்வநாதன் என்பவருக்கு அவரது தாயார் கமலாம்பாள் எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் அசலாகும். வா.சா.ஆ.11 ஆவணமானது 6.7.1981 தேதியில் கமலாம்பாள் அம்மாள் என்பவருக்கு கோவிந்தராஜு என்பவர் எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரத்தின் அசலாகும். வா.சா.ஆ.12 ஆவணமானது 8.8.2022 தேதியிட்ட வில்லங்கசச்சான்றாகும். வா.சா.ஆ.13 ஆவணமானது விஸ்வநாதன் என்பவர் பெயரிலுள்ள சிட்டாவின் உண்மை நகலாகும். வா.சா.ஆ.14 ஆவணமானது விஸ்வநாதன் பெயரிலுள்ள வீட்டு வரி ரசீதின் அசலாகும். வா.சா.ஆ.15 ஆவணமானது 18.8.1999 தேதியில் விஸ்வநாதன் என்பவருக்கு கமலாம்பாள் என்பவர் எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகலாகும். வா.சா.ஆ.16 ஆவணமானது வில்லங்கச் சான்றின் அசலாகும்.

(7) வா.சா.ஆ.1 முதல் 16 வரையான ஆவணங்களிலிருந்து வாதியிடமிருந்து 1ஆம் பிரதிவாதியின் கணவரும் 2, 3 பிரதிவாதிகளின் தகப்பனாருமான விஸ்வநாதன் என்பவர் 12.12.2015 தேதியில் ரூ. 50,00,000, 5.6.2020 தேதியில் ரூ.20,00,000 மற்றும் 19.11.2020 தேதியில் ரூ. 15,00,000 தொகைகளை கடனாகப்பெற்றுக்கொண்டு அதற்கு ஈடாக அடமானக்கடன் பத்திரம் வா.சா.ஆ.1

மற்றும் வா.சா.ஆ.2, 3 கடனுறுதிச்சீட்டுகளை எழுதிக்கொடுத்துள்ளார் என்பதும் தெரியவருகிறது. இறந்துபோன விஸ்வநாதனுக்கு வா.சா.ஆ.1ல் கண்ட சொத்து உள்ளது என்பதால் அவரது வாரிசுகளான 1 முதல் 3 பிரதிவாதிகள் அந்த சொத்தை அடையகூடியவர்கள். எனவே அவர்கள் இறந்துபோன விஸ்வநாதனின் கடனை தீர்ப்பதற்குக் கடமைபட்டவர்கள் ஆவர். இந்நிலையில் பிரதிவாதிகள் வாதியின் வழக்கை மறுத்தோ, வாதியின் சாட்சியத்தை பொய்ப்பித்தோ நீதிமன்றத்தில் முன்னிலையாகி வழக்கை நடத்த முன்வரவில்லை. எனவே வாதி வழக்குரையில் கோரியவாறு வழக்கு அனுமதிக்கத்தக்கது என்றும், வாதி வழக்குரையில் கோரியவாறு **ரூ.1,33,30,507/-ஐ** பெற அருகதை உடையவர் என்றும், வாதியின் வழக்கு அனுமதிக்கத்தக்கது எனவும் நீதிமன்றம் இப்பிரச்சினைக்கு தீர்வு காண்கிறது.

(8) முடிவாக, எதிரவரில்லா நிலையில் இவ்வழக்கு அனுமதிக்கப்பட்டு, வாதிக்கு வழக்குரையில் கோரியுள்ள ரூ.**1,33,30,507**/--ஐயும், அதில் அசல் தொகைகள் **ரூ.85,00,000/- (ரூ.50,00,000/- + ரூ.20,00,000/- + 15,00,000/- )**க்கு தாவா தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து தொகை செலுத்தப்படும் நாள் வரை 6% வட்டியுடனும் தாவா செலவுத் தொகையுடனும், பிரதிவாதிகள் கொடுக்க வேண்டுமென தீர்ப்பாணை வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, **2023 ஆம்**

**ஆண்டு ஜனவரித் திங்கள் 30 ஆம் நாள்** இந்நீதிமன்றத்தில் உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

**(ஒ-ம்) அ. மலர்விழி**

**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும்**
**அமர்வு நீதிபதி, தஞ்சாவூர்.**

**வாதி தரப்பு சாட்சி**

வா.சா.1 B.R.சங்கர் **(வாதி )**

**வாதி தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 12.12.2015 | வாதிக்கு விஸ்வநாதன் என்பவர் எழுதிக்கொடுத்த அடமானக் கடன் பத்திரத்தின் அசல் |
| வா.சா.ஆ.2 | 5.6.2020 | வாதிக்கு விஸ்வநாதன் என்பவர் எழுதிக்கொடுத்த கடனுறுதிச்சீட்டின் அசல் |
| வா.சா.ஆ.3 | 19.11.2020 | வாதிக்கு விஸ்வநாதன் என்பவர் எழுதிக்கொடுத்த கடனுறுதிச்சீட்டின் அசல் |
| வா.சா.ஆ.4 | 10.3.2021 | வாதிக்கு விஸ்வநாதன் என்பவர் எழுதிக்கொடுத்த கைலெட்டரின் அசல் |
| வா.சா.ஆ.5 | 11.12.2015 | வாதிக்கு, விஸ்வநாதன் என்பவர் எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட அடமானக் கடன் பத்திரத்தின் ஜெராக்ஸ் நகல் |
| வா.சா.ஆ.6 | 4.7.2022 | வாதி வழக்கறிஞர் மூலமாக பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பின் நகல் |
| வா.சா.ஆ.7 | …………………………… | 1ஆம் பிரதிவாதியிடமிருந்து திரும்பி வந்த வாதியின் அறிவிப்பு |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.8 | …............................ | 2ஆம் பிரதிவாதியிடமிருந்து திரும்பி வந்த வாதியின் அறிவிப்பு |
| வா.சா.ஆ.9 | …............................ | 3ஆம் பிரதிவாதியிடமிருந்து திரும்பி வந்த வாதியின் அறிவிப்பு |
| வா.சா.ஆ.10 | 1.7.2002 | விஸ்வநாதன் என்பவருக்கு கமலாம்பாள் எழுதிவைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் அசல் |
| வா.சா.ஆ.11 | 6.7.1981 | கமலாம்பாள் அம்மாள் என்பவருக்கு கோவிந்தராஜு என்பவர் எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரத்தின் அசல் |
| வா.சா.ஆ.12 | 8.8.2022 | வில்லங்கசச்சான்றின் அசல் |
| வா.சா.ஆ.13 | …............... | விஸ்வநாதன் என்பவர் பெயரிலுள்ள சிட்டாவின் உண்மை நகல் |
| வா.சா.ஆ.14 | …...................... | விஸ்வநாதன் பெயரிலுள்ள வீட்டு வரி ரசீதின் அசல் |
| வா.சா.ஆ.15 | 18.8.1999 | விஸ்வநாதன் என்பவருக்கு கமலாம்பாள் என்பவர் எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.16 | 8.8.2022 | வில்லங்கச் சான்றின் ஜெராக்ஸ் நகல் |

**(ஒ-ம்) அ. மலர்விழி**

**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு**

**நீதிபதி, தஞ்சாவூர்.**

**<u>தீர்ப்புரை</u>**

**<u>அசல் வழக்கு எண்.178/2022</u>**

**<u>நாள்: 30.1.2023</u>**